## நான்கு ஆண்டுகளில் 13 இலட்சத்து 82 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள்! ஒரு கோடியே 11 இலட்சம் பட்டா மாறுதல்கள்!

# 3 கோடியே 78 இலட்சம் சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறோம்!

## சட்டப்பேரவையில் வருவாய்த்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பதிலுரை!

சென்னை, ஏப்.5-

**சட்டப்பேரவையில் வருவாய்த்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதிலுரையில் 3 கோடியே 78 இலட்சம் சான்றிதழ்கள் இந்த நான்கு வருடங்களில் வழங்கியிருக்கிறோம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டதுடன் அடுக்கடுக்கான 19 அறிவிப்புகளையும் அறிவித்தார்.**

வருவாய்த்துறை மோனியக் கோரிக்கையில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதிலுரை வருமாறு:-

கொள்கையில் பெரியாரையும், அறிவில் அண்ணாவையும் சேர்த்து செய்த கலவையாக நமக்கு கிடைத்த திருக்குவளை தந்த தியாக வேங்கை, கோபாலபுரத்து கொற்றவன், கொள்கை கோமான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) காலம் கருதி, நாடு காக்க, இனம் காக்க, மொழி காக்க கலைஞர் அவர்கள் கொடுத்த அருட்கொடை, விடியல் அரசு தந்த விடிவெள்ளி; தமிழ்நாட்டின் தலைமகன் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை தலைவன், எதிர்கால இளைய சமுதாயத்தின் நிகழ்காலத் தலைவன், திராவிட இயக்கக் குலக்கொழுந்து, அன்பு இளவல் தம்பி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கம். வந்திருக்கக்கூடிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம். தொடர்ந்து இந்த அவைக்கு என்னை ஒன்பது முறை சட்டமன்ற உறுப்பினராக அனுப்பிய அருப்புக்கோட்டை தொகுதி மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் அன்பான வணக்கம்.

**வருவாய்த்துறை மாறுபட்ட துறை!**

வருவாய்த் துறை என்பது எல்லா துறைகளிலிருந்தும் மாறுபட்ட ஒரு துறை. இது ஒரு சேவைத் துறை. ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பொறுப்பு இருக்கும். ஆனால், வருவாய்த் துறையைப் பொறுத்தளவுக்கு மக்களோடு ஒன்றியிருந்து, அவர்களோடு பிண்ணிப் பிணைந்திருக்கின்ற துறை. அனைத்துத்தரப்பு மக்களும், நாமாக இருந்தாலும் சரி, நமது வீட்டிலே யாராக இருந்தாலும் சரி, பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்திற்கும் சான்றிதழ் கொடுக்கக்கூடிய அந்தப் பொறுப்பு வருவாய்த் துறைக்கு இருக்கிறது. ஆகவே, அன்றாடம் நடக்கின்ற நிகழ்வுகளில் இத்துறை பங்கெடுத்துக்கொள்கிறது. அதேபோல, OAP கொடுப்பதும் நம்முடைய வருவாய்த்துறையின்கீழ் தான் வருகிறது. பேரிடர்காலங்களில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இத்துறைதான் மேற்கொள்கிறது. நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்குதல், பட்டா மாற்றம், நிலத்தின் எல்லைகளை அளந்து காட்டுதல், நிலத்தை கையகப்படுத்திக் கொடுத்தல் போன்ற அத்தனை பணிகளையும் வருவாய்த் துறைதான் செய்து கொண்டிருக்கிறது. வருவாய்த் துறையில் இருக்கின்ற அதிகாரிகளை நாம் சந்திக்காமல் இருக்க முடியாது. அந்தளவிற்கு நம்மோடு தொடர்பில் இருப்பவர்கள்.

வீட்டுமனையைப் பொறுத்தளவுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டில்தான் இதற்கு ஒரு முடிவு எடுத்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டில் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி வசித்து வரும் மக்களுக்கு வீட்டுமனைகளை சொந்தமாக்கிட ஒரு சிறப்பு வரன்முறைத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதன்படி, இந்தத் திட்டத்தில் கிராமங்களில் வாழ்கிறவர்களுக்கு 3 சென்ட் நிலமும், நகர்ப்புறங்களில் வாழ்கிறவர்களுக்கு 2 சென்ட் நிலமும் வழங்கப்படுகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 13 இலட்சத்து 82 ஆயிரம் பட்டாக்கள் வழங்கியுள்ளோம். சகோதரர் பேசிய நேரத்தில், இந்த பட்டா வழங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டில் கொண்டுவந்த இந்த சட்டத்தின் விளைவாகத்தான் நாம் எல்லோருக்கும் பட்டா கொடுக்கக்கூடிய அந்த வாய்ப்பு கிடைத்தது. அப்படி இல்லையென்றால், நமக்கு பட்டா கொடுக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்காமல் போயிருக்கும். குறிப்பாக, ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக வழங்கப்பட்ட பட்டாக்கள் அரசுக் கணக்கில் ஏற்றப்படாமல் இருந்தது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், அவை அனைத்தையும் இ-பட்டாவிலே ஏற்றி, உடனடியாக அளந்து கொடுக்கவேண்டும் என்று கூறியதன்விளைவாக ஆதிதிராவிடர் நலத் துறையில் பட்டா வழங்கப்படாமல் இருந்த 3 இலட்சத்து 42 ஆயிரம் நபர்களுக்கு இ-பட்டா வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இருளர், நரிக்குறவர் போன்ற விளிம்புநிலை மக்களுக்கும் 55 ஆயிரத்து 957 பட்டாக்கள் வழங்கியிருக்கின்றோம்.

## நான்கு ஆண்டுகளில் புயல் - மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 15, 272 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கியிருக்கிறார் முதல்வர்!

இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, 6 இலட்சம் நபர்களுக்கு பட்டா வழங்கவிருக்கின்றோம். ஒரு மாதத்திற்கு 50 ஆயிரம் பட்டாக்கள் வழங்குகிறோம். நமது முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் செல்கின்ற நேரத்தில், குறைந்தபட்சம் 30-50 ஆயிரம் பட்டாக்கள் வழங்குகின்ற பணியை வருவாய்த்துறை மேற்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டுக்குள்ளாக 6 இலட்சம் பட்டாக்கள் கொடுத்தாக வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய கடுமையான உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல, சென்னை மற்றும் சென்னைப் புறநகரை ஒட்டியிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களெல்லாம் தொடர்ந்து-வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடு வாங்கியவர்கள், நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின்மூலம் வீடுவாங்கியவர்கள் ஆகியோர்களுக்கெல்லாம் இதற்கு முன்பு, அவர்கள் பெயருக்கு பட்டா கொடுப்பதில்லை. அரசாங்கத்தின் பெயரில்தான் அந்த பட்டா இருக்கும். மாண்புமிகு அமைச்சர்களின் இரண்டு துறைகள் இருக்கின்றன. அவர்கள் வீடு கட்டிக் கொடுத்தாலும்கூட, அந்த இடம் அரசாங்கத்தின் பெயரில்தான் இருக்கும். வாங்கியவர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைதான் கொடுத்திருப்பார்களே தவிர, பட்டா இருக்காது. அந்த இரண்டு துறைக்கும், இந்த அரசாங்கம் வந்த பிறகு, நம்முடைய நம்முடைய முதலமைச்சர் வந்த பிறகுதான் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு துறைகளும், அவர்கள் நேரடியாக பட்டா கொடுக்கின்ற வேலையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தான் செய்திருக்கிறார்கள். இன்னொன்று, இந்த belt area பிரச்சினை. இந்த பிரச்சினை 1962-ல் ஆரம்பித்தது. அந்த நேரத்தில், இது ஒரு நல்ல எண்ணத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை விரிவாக்கம் செய்யப்படுகின்ற நேரத்தில் அரசாங்கத்திற்கு இடம் வேண்டுமென்பதற்காக belt area என்று வகைப்படுத்தி, 16 கி.மீ. அளவிற்கு யாருக்கும் பட்டா வழங்கக்கூடாது என்று 1962-ல் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில், இன்று வரை நாம் யாருக்கும் பட்டா கொடுக்க முடியாமல் போய்விட்டது. அதையும் நமது முதலமைச்சர் அவர்கள், கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளார்கள். நம்முடைய அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னையைச் சுற்றியுள்ள ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்ததன் விளைவாக, அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று நினைத்தார்கள். 1962-ல் சட்டம் கொண்டு வந்தபோது இருந்த சூழ்நிலை வேறு. தற்போதுள்ள சூழ்நிலை வேறு. இத்தனை ஆண்டுக் காலமாக அங்கேயே குடியிருந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு நல்வழி செய்ய வேண்டுமென்றுக் கருதி, அவர்களுக்கும் பட்டா வழங்கக்கூடிய பணிகளையும் இந்த அரசாங்கத்தின் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதிலும்கூட சிறு சிறு மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று அமைச்சர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு வீடுகட்டி குடியிருக்கக்கூடிய அனைவருக்கும் பட்டா கிடைக்கக்கூடிய அளவிற்கு பணிகளை செய்து கொடுப்போம்.

**மேய்க்கால் புறம்போக்கு!**

அடுத்ததாக, மேய்க்கால் புறம்போக்கு பிரச்சினை. இங்கு பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே மேய்க்கால் புறம்போக்கு பிரச்சினை குறித்து பேசினார்கள். அதுவும் குறிப்பாக, சென்னையில் இருப்பவர்களுக்கு அது பெரிய பிரச்சினை. மேய்க்கால் புறம்போக்கு பிரச்சினையையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக முதலமைச்சர் அவர்கள் ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். 2022 ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றம் ஓர் உத்தரவிட்டிருக்கிறது. அதில் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் தனியாருக்கோ, வீடுகளுக்கோ பட்டா வழங்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மக்கள் அந்த நிலங்களில் நீண்ட காலமாக குடியிருந்து வருகிறார்கள்; அதிலும் ஒருசில நியாயங்கள் இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டு, அதற்கு உயர் நீதிமன்றத்தின் உத்தரவோடு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையிலேயோ, சென்னையைச் சுற்றியோ, தமிழ்நாட்டிலோ வீடுகட்டி குடியிருந்து வருபவர்களை, வெளியற்றும் பணிகளை ஒரு போதும் இந்த அரசாங்கம் செய்யாது. அதில் பிரச்சினைக்குரிய ஒன்று என்னவென்றால், நீர்நிலைப் புறம்போக்கு மட்டும்தான். நீர்நிலைப் புறம்போக்கு பிரச்சினை உச்ச நீதிமன்றம் வரை சென்று, நீர்நிலைப் புறம்போக்குகளில் வசிப்பவர்களை, அங்கிருந்து வெளியேற்றியே ஆக வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதிலும்கூட, எங்களால் முடிந்தளவிற்கு, அங்கு வசிப்பவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல், எவ்வளவு தூரம் அவர்களோடு இணக்கமாகச் செல்ல முடியுமோ அந்தளவிற்கு இணக்கமாகச் சென்று, அவர்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, யார் கண்ணிலிருந்தும் கண்ணீர் வரக்கூடிய ஒரு சூழ்நிலையை நாங்கள் உருவாக்க மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)



அடுத்து, சிப்காட். தொழில் துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கும் சிப்காட்டிற்கும் இதேபோன்று நிலம் எடுக்கப்பட்டுள்ளது. அந்த நிலத்தை அவரவர்கள் பிரித்து factory அமைக்கிறார்கள். ஆனால், அந்த நிலத்திற்கான பட்டா factory கட்டுபவர்கள் பெயரில் இருக்காது; அரசாங்கத்தின் பெயரில்தான் இருக்கும். அவர்களுக்கும் பட்டா வழங்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதன்பேரில், தற்போது அந்த நிலத்தை யார் வாங்கியிருக்கிறார்களோ, அவர்களுக்கு பட்டா வழங்குகிற பணியையும் திராவிட மாடல் அரசின் நாயகன் அண்ணன் தளபதி அவர்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**ரேஸ் கிளப் நிலம்!**

அடுத்து, Madras Race Club நிலம். இத்தனை ஆண்டுக் காலமாக யாரும் கை வைக்க முடியாத நிலத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கை வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது மொத்தம் 160 ஏக்கர் பரப்பு. அதேபோன்று தோட்டக்கலை சங்கம். இது எத்தனை ஆண்டுக்காலப் போராட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் அந்தப் பகுதி சாலைகளில் நம் மால் போகவே முடியாது. அவ்வளவு traffic. தோட்டக்கலை சங்கம், Madras Race Club இடங்கள், Ooty Racecourse ஆகிய இடங்களையெல்லாம், தனியாருக்கு அல்லாமல், நம்முடைய பயன்பாட்டிற்கு, பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு வர வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் பொழுதுபோக்கிற்கான இடமாக இருக்க வேண்டும்; பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எங்கள் துறை உதவியாக இருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுக் காலத்தில், 35,654 ஏக்கர் அரசாங்க நிலங்களை நாம் மீட்டிருக்கிறோம். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், நிலங்களை மீட்டோம், மீட்டோம் என்று எவ்வாறு சொல்கிறாரோ, அவ்வாறு வருவாய்த் துறையும் இந்த 4 ஆண்டுக் காலத்தில் 35,654 ஏக்கர் அரசாங்க நிலங்களை மீட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மதிப்பு சுமார் 20,325 கோடி ரூபாயாகும். இத்தகைய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, இன்றைக்கு இரயில்வே துறை, நெடுஞ்சாலைத் துறை (NH) போன்றவற்றுக்கெல்லாம் நாங்கள் உடனிருந்து, விரைவுபடுத்தி நமக்கு இரயில்வே பணிகள் நடைபெறுகின்றன. இதில் என்ன பிரச்சினை என்று சொன்னால் இரயில்வேயிலிருந்து நமக்கு உத்தரவு வருகிறது. அதற்குரிய பணம் வந்தால்தான் LA எடுத்து நாம் பணம் கொடுக்க முடியும். இந்த ஊரிலும் இந்த ஊருக்கு என்று உத்தரவு கொடுத்து விடுகிறார்கள். அதற்குரிய LA எடுக்க வேண்டுமென்று சொன்னால் பணம் வேண்டும். எவற்றிற்கெல்லாம் பணம் வந்ததோ அதையெல்லாம் நாங்கள் உடனடியாக எடுத்துக் கொடுக்கக்கூடிய பணிகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். நெடுஞ்சாலைத் துறைக்கும் அதே போன்று செய்து கொண்டிருக்கிறோம். தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கும் செய்து கொண்டிருக்கிறோம்.

விமான நிலையத்தைப் பொறுத்தவரை மதுரை மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கு முழுவதுமாக நிலம் எடுத்துக் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருமே என்ன நினைத்தார்கள் கோயம்புத்தூருக்கும், மதுரைக்கும், தூத்துக்குடி-- தூத்துக்குடி விமான நிலையத்திற்கும், மதுரை விமான நிலையத்திற்கும் நாங்கள் முழுவதுமாக நிலம் எடுத்துக் கொடுத்துவிட்டோம். கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கு 468 ஏக்கர் நிலம் எடுக்க வேண்டும். அதிலே 460 ஏக்கர் நிலம் எடுத்துக் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட எந்த அரசாங்கம் வேகமாகச் செய்ய முடியும்? யார் நிலம் எடுக்கச் சென்றாலும், நிலம் எடுக்க யார் விடுகிறார்கள்? யார் நியாயம் பேசினாலும்கூட, (குறுக்கீடு) சேலம் மாவட்டத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். முடிந்த பணிகளை மட்டும் தற்போது சொல்கிறேன். நீங்கள் கேட்பீர்கள் என்பதற்காக அனைத்து விவரங்களையும் தயாராக வைத்திருக்கிறேன். அதாவது, நிலம் எடுக்கும்போது நிறைய பிரச்சினைகள் வருகின்றன. அரசியல்ரீதியான பிரச்சினைகள், சமுதாயரீதியான பிரச்சினைகள், அங்கே வாழ்கிறவர்கள், விவசாயிகளுடைய பிரச்சினைகள் போன்றவற்றையெல்லாம் நாம் கவனத்தோடு கையாள வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் சரிசெய்து எடுப்பதற்கு சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு உரிய தொகை அதிகமாகக் கொடுக்கக்கூடிய அளவிற்குத்தான் கொடுக்கிறோமேயொழிய அந்த Sub-Registrar valuation கொடுப்பதில்லை. நேரடியாகப் பேசி அதிகப்படியான தொகை வழங்கப்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

## 550 புதிய வருவாய் குறு வட்டங்கள் - 8 மாவட்டங்களில் 25 வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்!

அதேபோன்று, நில அளவைத் துறை (Survey and Settlement), இந்தியாவிலேயே முதன்முதலில் சென்னையில்தான் ஆரம்பித்திருக்கிறார்கள். 1802 ஆம் ஆண்டு Colonel William Lambton என்ற ஆங்கிலே அதிகாரி சென்னைக்கு அருகே இருக்கக்கூடிய பரங்கிமலையை ஒரு முக்கோணமாக வைத்திருக்கிறார். அதைச் சர்வே செய்யும்போது பார்த்தால் ஒரு முக்கோணமாகத்தான்--ஒரு point, எந்த point என்றால் பரங்கிமலையைத்தான் point ஆக வைத்திருக்கிறார்கள். நாம்தான் முதன்முதலில் ஒழுங்காக சர்வே செய்திருக்கிறோம். இந்தியாவிலேயே Survey and Settlement-ல் ஒழுங்காகக் கணக்குகள் வைத்திருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தபிறகு அதிலே புதுப்புது மாற்றங்கள் கொண்டுவந்துள்ளார்கள். முன்பெல்லாம் சங்கிலி வைத்துத்தான் அளப்பார்கள். நம் ஊர்ப்புறங்களில் எல்லாம் சங்கிலி வைத்துத்தான் அளந்தார்கள். அதெல்லாம் தற்போது கிடையாது. இப்போது டிரோனில் அளக்கும் அளவிற்கு வந்துவிட்டோம். வேகமாகச் செய்கிறோம். எல்லோரும் வேகமாகச் செய்து கொடுங்கள் என்று கேட்கிறார்கள். முன்பெல்லாம் கிராமத்தில் விவசாயிகள் சங்கிலியைத் தூக்கிக்கொண்டுதான் செல்வார்கள். இப்போது எந்த விவசாயி சங்கிலியைத் தூக்கிக் கொண்டு செல்லத் தயாராக இருக்கிறார்கள்? அதேபோன்று அங்கு VAO-வும் இல்லை, தலையாரியும் இல்லை, அளந்து கொடுப்பவரும் சங்கிலியைத் தூக்கு வதற்குத் தயாராக இல்லை. ஆகவே, இதையெல்லாம் மாறுதல் செய்து இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதையும் விரைந்து செய்ய வேண்டுமென்று அதற்குரிய பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள்.

பட்டா வழங்குதல். உறுப்பினர் கூறியது. நீங்கள் கூறியவற்றையெல்லாம் சேர்த்து இந்த 4 வருடத்தில் 1 கோடியே 11 இலட்சம் பேருக்கு e-patta வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சராசரியாக மாதம் ஒன்றுக்கு 6 இலட்சத்து 35 ஆயிரம் பேருக்கு நாங்கள் பட்டா கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. பட்டா வழங்குவதைத் துரிதப்படுத்துவதற்கு ஒரு surveyor நியமித்திருக்கிறோம். அன்னாச்சி அவருடைய துறைக்கு surveyor கேட்கிறார்கள். அதற்கு surveyor-ஐ temporary ஆக வெளியிலிருந்து எடுக்கிறோம். அதற்கும், மெட்ரோ போன்றவற்றிக்கு கிட்டத்தட்ட ஆயிரம் பேர் surveyor வெளியிலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கிறோம். அவர்களெல்லாம் வருவதனால்தான்--நம்மிடம் இருக்கும் surveyor மட்டும் அனுப்பி வேலை செய்தால் போக்குவரத்து நடக்காது. மெட்ரோவாக இருந்தாலும் சரி, NH ஆக இருந்தாலும் சரி அளப்பதற்கு temporary ஆக நாங்கள் பணியாட்கள் எடுத்து அவர்களையும் அந்தப் பணிக்குப் பயன்படுத்துகிற காரணத்தால்தான் இன்றைக்குப் பணிகள் விரைவாக நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை. அதாவது, permanent job என்பது நம்மிடம் பணிபுரிபவர்கள். உதாரணமாக அவர்கள் 50 பேர் வேண்டும் என்று கேட்டால் நாங்கள் 50 பேர் அனுப்புகிறோம். மெட்ரோ 50 பேர் வேண்டுமென்று கேட்டால், 50 பேரை அனுப்புகிறோம். நம்மிடம் பணிபுரிபவர்களை அனுப்பிவிட்டால் local-ல் நமது பணி பாதிக்கப்பட்டுவிடும்.

Local-ல் ஏற்கெனவே நிலத்தை அளந்து கொடுப்பதில், காலதாமதம் ஆகிறது என்று அனைவரும் complaint செய்கிறார்கள். அத்தகைய complaint இன்னும் கொஞ்சம் கூடுதலாக வரும். எனவே, அப்படி நடைபெறாமலிருப்பதற்கான பணிகளை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நிலங்களைப் பொறுத்தவரை மூன்று விதமான நிலங்கள் இருக்கின்றன, அதாவது, நகராட்சிகள், கிராம நத்தம், கிராம நத்தம் என்றால் இந்த கிராம நத்தத்தில் வீடுகள் இருக்கின்றன, மற்றும் கிராமப்புற விவசாய நிலங்கள். கிராமப்புற விவசாய நிலங்களைப் பொறுத்தவரை, ஏற்கெனவே survey எல்லாம் செய்யப்பட்டுள்ளன. அதற்கு என்ன காரணமென்றால், ஆங்கிலேயர்கள் காலத்திலிருந்து விவசாய நிலங்களுக்குத்தான் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அதனால் கிராமப்புற விவசாய நிலங்களை அவர்கள் ஏற்கெனவே ஒழுங்காக அளந்து வைத்திருக்கிறார்கள். ஒழுங்காக அளந்து வைக்காதது என்னவென்றால், கிராமங்களிலுள்ள வீடுகள், நகரத்திலுள்ள வீடுகள் ஆகியவையே. இவற்றுக்கெல்லாம் ஆங்கிலேயர்கள் காலத்தில் வரி வாங்கவில்லை. எனவே, அவர்களுக்குத் தேவையில்லாத நிலை இருந்த காரணத்தால், அவை ஒழுங்கு செய்யப்படாமல் இருந்தன. ஆனால், விவசாய நிலங்களுக்கு வரி வசூல் செய்யக்கூடிய தேவையிருந்த காரணத்தினால், அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி வைத்திருந்தார்கள். எனவே, கிராமப்புற விவசாய நிலங்கள் முழுவதுமாக இன்றைக்கு நம்முடைய கணக்கில் இருக்கின்றன. அதேபோல, கிராம நத்தம் வீடுகள். அதிலும் ஏறத்தாழ முக்கால்வாசி பேருக்கு முடிக்கப்பட்டுவிட்டது. Survey and settlement என்பது இப்போது ஒவ்வொரு ஊரிலும் நடந்து கொண்டிருக்கிறது. இப்பணிகள் அனைத்தையும் இந்த ஆண்டுக்குள் முழுவதுமாக முடிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர் வீடுகளின் நீள, அகலம் எவ்வளவு இருக்கிறது என்பதை சொல்லக்கூடிய அந்தப் பணியை விரைவாகச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணிகள் எல்லாம் விரைவில் நடக்கும் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

OAP-ஐப் பொறுத்தளவில், 7 ஆம் மாதத்திலிருந்து நின்றுபோய்விட்டது என்று சொன்னார்கள். அதற்கான காரணத்தினை நான் சொல்ல வேண்டியதில்லை, உங்களுக்கே தெரியும். மகளிர் உரிமைத் தொகை கொடுக்கும்போது இங்கேயும் மனு கொடுக்கிறார்கள், அங்கேயும் மனு கொடுக்கிறார்கள். Online-ல் ஒரே நபருக்கு இரண்டு இடத்திலும் வரும். அதையெல்லாம் சரிசெய்வதற்காக நிறுத்தி வைத்து, யார் யார் தகுதியானவர்களோ அவர்களுக்கெல்லாம் OAP கொடுப்பது--, மகளிர் உரிமைத் தொகை கொடுப்பதற்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்காக-- அதில் கொஞ்சம் சுணக்கம் இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம், இன்னும் 50,000 பேருக்கு அதிகமாக வழங்குவதற்குச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் என்ன சொன்னோமென்றால், ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் order கொடுத்துவிட்டார்கள். நிகழ்ச்சிகள் நடக்கும்போது என்ன செய்திருக்கிறார்கள் என்றால், OAP பெறும் வயதானவர்களுக்கு அவர்கள் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். பணம் இன்னும் போய்ச் சேராமல் இருக்கிறது என்று சொன்னவுடன், இன்னும் 50,000 பேருக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, யார் யாரெல்லாம் கையில் order வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் பணம் வந்துசேரக்கூடிய அந்தப் பணியை நிச்சயமாக செய்து கொடுப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

**27 வகையான சான்றிதழ்கள்!**

அதேபோல, சான்றிதழ் கொடுப்பது. அனைத்து வகையான சான்றிதழ்கள் கொடுப்பது. இந்த நான்கு ஆண்டுகளில் அனைத்து வகையான சான்றிதழ்களையும் சேர்த்து மொத்தம் 3 கோடியே 78 இலட்சம் சான்றிதழ்களைக் கொடுத்திருக்கிறோம். சான்றிதழ்களைப் பொறுத்தவரை, 18 வகையான--, 27 வகையான சான்றிதழ்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மனிதருக்குத் தேவையான 27 வகையான சான்றிதழ்கள் இருக்கின்றன. அந்த சான்றிதழ்களை, இதுவரை மொத்தம் 3 கோடியே 78 இலட்சம் பேருக்கு நாம் வழங்கியிருக்கிறோம். முக்கியமாக, சான்றிதழ்களை 15 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கவில்லையென்றால் காரணம் சொல்ல வேண்டும். இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், rejection என்று குறிப்பிட்டு அனுப்பிவிடுகிறார்கள். மனுதாரர்கள் அதை எடுத்துக் கொண்டு மீண்டும் தாலுகா அலுவலகத்திற்கு வந்து நிற்கிறார்கள். எங்கே போகக்கூடாது என்று நினைத்து, நாம் ஒரு செயலைச் செய்கிறோமோ, அந்தச் செயலே மீண்டும் நடைபெறுகிறது. எனவே, அவ்வாறு rejection என்று குறிப்பிடக்கூடாது. Rejection என்று குறிப்பிடாமல், என்ன காரணம் என்று குறிப்பிட வேண்டும் அல்லது VAO மூலமாக மனுதாரரை அழைத்து, அந்தப் பணிகளை முடித்துத் தரவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். மேலும், பொதுமக்களுக்கு எளியமுறையில் சேவைகள் கிடைக்கும் வகையில் அந்தப் பணிகளை செய்து கொண்டிருக்கிறோம் என்றும் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மக்களுடன் முதல்வர். முதலமைச்சர் அவர்களின் மக்களுடன் முதல்வர் திட்டத்தின்மூலமாக இதுவரை 22 இலட்சத்து 59 ஆயிரம் மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மக்களுடன் முதல்வர் திட்டம் 2023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மொத்தம் 4,402 முகாம்கள் நடத்தப் பெற்றுள்ளன. அவற்றின்மூலம் 22 இலட்சத்து 59 ஆயிரம் மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. தற்போது இந்த ஆண்டில் 24 மாவட்டங்களில், 184 தாலுகாக்களில், 1270 இடங்களில் மக்களுடன் முதல்வர் திட்ட நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இதனை ஜனவரி 2025-க்குள் முடிக்க வேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். ஒவ்வொரு செயலையும் அதேபோன்று செய்கிறார்கள்.

அதேபோல, உங்களைத் தேடி உங்கள் ஊரில். இத்திட்டம் பற்றி உங்களுக்குத் தெரியும். மாவட்டத்தின் ஏதாவது ஒரு வட்டத்தில் மக்களைச் சந்திப்பதற்கு, மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை மாவட்ட ஆட்சித் தலைவர் போக வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செல்ல வேண்டும். அவர்கள் அங்கு சென்றுவிட்டு, இரண்டு மணி நேரங்களில் வந்துவிட முடியாது. முதல் நாள் காலை 9-00 மணிக்குச் சென்று, அன்றிரவு ஏதாவது வீடு எடுத்து தங்கி, மறுநாள் காலை 9-00 மணிக்குத் தான் திரும்பி வர வேண்டும். இப்படியொரு திட்டம் தீட்டப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சென்று பணிகளை மேற்கொள்கிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியில், 'அம்மா திட்டம்' என்றொரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்; அதை ஒரு நல்ல நோக்கத்தோடுதான் கொண்டுவந்தார்கள். ஆனால், அந்தத் திட்டத்தில் என்ன mistake இருந்ததென்றால், அவர்கள், சம்பந்தப்பட்ட தாசில்தாரை மட்டும் போகச் சொல்லியிருக்கிறார்கள். தாசில்தார் மட்டும் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் இருக்கின்றன; RDO தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் இருக்கின்றன;

மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் இருக்கின்றன. தாசில்தார் மட்டும் சென்றால் எப்படி பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்? ஆகவே, நாலாவட்டத்தில் அம்மா திட்டத்தின் செயல்பாடு குறைந்துவிட்டது. எனவே, அதையெல்லாம் கருதிப் பார்த்துத்தான், RDO, Tahsildar and Collector ஆகியோரெல்லாம் சேர்ந்து சென்று பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதன் காரணமாக, தற்போது பணிகளெல்லாம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி 5-ஆம் பக்கம்